(c) whether any financial assistance has been given to the above Company by the State-owned financial bodies; and

(d) if so, the details thereof ?

இந்திய-இத்தாலிய மிதியடி தயாரிப்பு நிறுவனம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் உள்ள இந்திய-இத்தாலிய மிதியடி தயாரிப்பு நிறுவனம் மூடப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) மேற்சொன்ன நிறுவனத்திற்கு மாநில நிதி வழங்கு அமைப்புகள் நிதி உதவி அளித்துள்ளனவா ?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை. அந்தக் கம்பெனி தற்காலிக மாக மூடப்பட்டுள்ளது.

(இ) வினாவுக்கு இடமில்லை.

(உ) இல்லை.

(எ) வினாவுக்கு இடமில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, மீண்டும் இந்த நிறுவனம் திறக்கப்படுமா, எப்போது திறக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழகத்தில் இருந்த இந்தத் தொழிற் சாலை பல இடையூறுகளாலும், விலையை நிர்ணயிப்பதிலும், 'கொலாபரேஷன்' பெறுவதிலும் சில கஷ்டங்கள் ஏற்பட்டதாலும், மூடப்பட்டதாகத் தகவல் வந் திருக்கிறது.

Court-fee Stamps

* 14 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the public are unable to get from the Stamp Vendors, Court-fee Stamps of the denomination they require ;

(*b*) if so, the reason for such scarcity ; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter ?

[1973 பிப்ரவரி 5

நீதிமன்றக் கட்டண முத்திரைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முத்திரைத்தாள் விற்பனையாளர்களிடமிருந்து பொதுமக்கள் தங்களுக்கு வேண்டியுள்ள தொகைக்கான நீதிமன்றக் கட்டண முத்திரை வில்லைகளைப் பெற முடிவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், முத்திரைத் தாள் பற்றுக்குறைக்கான காரணம் என்ன ?

(உ) இதுகுறித்து அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலும், கோவை போன்ற சில மாவட்டங்களிலும் இந்த முத்திரைத்தாள் நாம் கேட்கிற படி கிடைப்பதில்லை. 1½ ரூபாய்க்கு வேண்டும் என்று கேட்டால், 15 பைசா தாளை 10 எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்லும் நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி நிலைமை 5, 6 மாதங்களுக்கு முன்னால் அதிகமாய் இருந்தது. இப்போது அது கொஞ்சம்தான் குறைந்திருக்கிறது. இதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோர்ட் பீஸ் ஸ்டாம்பு கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. ஆனால் இப்போது பத்திரப் பதிவுகள் பண்ணுவதில் முறைப்படி கோர்ட்டே அதை விதிக்கின்ற பொறுப்பை ஏற்கவேண்டும் என்று சொன்னோம். அதற்கு மறுத்துவிட்டார்கள். இது நாசிக்கிலிருந்துதான் வரவேண்டும் என்கிற காரணத்தால், இதிலே ஏறக்குறைய அண்மையில் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. மற்றக் காலங்களில் பற்றுக்குறை வேண்டுமென்றே ஸ்டாம்பு வெண்டர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஸ்டாம்பு வெண்டர்களிடம் எல்லா இடங்களிலும் கிட்டத்தட்ட 7 கோடி 90 லட்சம் ரூபாய்க்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தக் கோர்ட் பீஸ் ஸ்டாம்புகள் இருப்பு இருக்கிறது.